**சுருக்கம்**

பூங்கா – கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய சிறைச்சாலைக்குரிய நிலத்தில் செம்மொழி பூங்கா அமைத்தல் மற்றும் செம்மொழிப்பூங்கா கண்காணிப்புக்குழு ஏற்படுத்துதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை**

அரசாணை (நிலை) எண்.57 நாள்: 26.03.2010

படிக்கவும்:

சென்னை – நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் உறுப்பினர் செயலரது கடிதம் எண்.CRRT/செம்மொழி பூங்கா/2010/01,நாள்:16.2.10

* * * * *

**ஆணை:-**

உறுப்பினர் – செயலர், சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை , தனது கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைக்குரிய நிலத்தில் " செம்மொழி பூங்கா" அமைக்கப்படும் என அறிவித்துள்ளார் என்றும், இது குறித்து 7.1.2010 அன்று நடந்த கூட்டத்தில் இப்பூங்காவினை அமைக்கும் பணியை 'சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையிடம்' ஒப்படைக்கலாம் எனவும், மேலும் மாண்புமிகு முதலமைச்சர்/மாண்புமிகு துணை முதலமைச்சர் தலைமையில் செம்மொழி பூங்கா அறக்கட்டளை நிறுவலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2. செம்மொழி பூங்கா அமைய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கோவை மத்திய சிறைச்சாலை இடத்தின் பரப்பு மொத்தம் 165.4 ஏக்கர் எனவும், அது சிறைச்சாலைத்துறைக்கு சொந்தமானது எனவும், இந்நிலத்தில் கோவை மத்திய சிறைச்சாலை 72.3 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது என்றும், மீதியுள்ள 93.2 ஏக்கர் நிலத்தில் பல கட்டிடங்களும் காலிஇடமும் உள்ளன என்றும் முதற்கண் இதில் குறைந்த அளவில் கட்டிடங்களும் மீதி காலியாகவும் உள்ள 49.4 ஏக்கர் நிலத்தில் செம்மொழி பூங்காவினை அமைக்கலாம் எனவும்,கோவை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாக உறுப்பினர் – செயலர், சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை தெரிவித்துள்ளார்.

3. உறுப்பினர் – செயலர், 'சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை' அவர்கள் மேலும் தனது கடிதத்தில், உத்தேசிக்கப்பட்டுள்ள செம்மொழி பூங்கா இயற்கை சுற்றுச்சூழல், உயிர்கோளம் (Biosphere) முதலியவற்றை காப்பதற்கான மையமாகவும் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மையமாகவும் திகழ்வதோடு இயற்கை ஆர்வலர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு இடமாகவும்

திகழும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். செம்மொழி பூங்கா கீழ்க்கண்ட நோக்கங்களை நிறைவேற்றும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்:

(1) ஒரு தாவரவியல் தோட்டத்தை பின் புலமாகக்கொண்டு குடிமக்கள் இயற்கையை அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும், அனுபவிக்கவும் உதவுதல்.

(2) பொதுவாக பல்லுயிர்ப் பெருக்க ஆதாரங்களையும் குறிப்பாக தாவர இனங்களையும் நிலைக்கத்தக்க வகையில் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்துதல்.

(3) மேற்குமலைத்தொடரில் குறிப்பாக நீலகிரி உயிர்கோள படுகையில் உள்ள அரியவகை தாவர இனங்களை (Flora) பாதுகாத்தல்.

(4) சுற்றுச்சூழல் ஆளுமையை (Environmentral Governance) நிறுவி மேம்படுத்தி மேலாண்மை செய்தல்.

4. மேற்கண்ட சூழ்நிலையில் உறுப்பினர் – செயலர், சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை அவர்கள் கீழ்கண்ட செயற்குறிப்புகளை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

(i) செம்மொழி பூங்காவிற்கான பெருந்திட்டத்தை தயாரித்து அமைக்கும் பணியை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு ஒப்படைக்க வேண்டும்.

(ii) இப்பணிக்குரிய கலந்தாய்வு ஒப்பந்தங்கள் மற்றும் பணி ஒப்பந்தங்களுக்கு ஒப்புதலளிக்கும் அதிகாரத்தை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு வழங்கலாம்.

(iii) செம்மொழி பூங்கா அமையவுள்ள கோவை மத்திய சிறைத்துறைக்குரிய மொத்த நிலப்பரப்பு 165.4 ஏக்கர் முழுமைக்குமாக பெருந்திட்டம் (Master Plan) தயாரித்தல். அதற்கு முதல் கட்டமாக காலியாகவுள்ள 49.40 ஏக்கர் நிலத்தில் பணி மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை மற்றும் செயலாக்க திட்டத்தை கட்டிட கலைஞர்களுக்கான போட்டி மூலம் தயாரித்து கண்காணித்து, அமலாக்குதல்.

(iv) செம்மொழி பூங்காவை நிறுவுவதற்கான காலக்கெடுவை பின்வருமாறு நிர்ணயிக்கலாம்:

| வ.எண் | பணிவிவரம் | காலக்கெடு |
|---|---|---|
| 1. | வடிவமைப்பு, கண்காணிப்பு மற்றும் மேலாண்மை செய்வதற்கான கலந்தாய்வாளர்களை நியமித்தல். | 2 மாதங்கள் |

| | | |
|---|---|---|
| 2. | பெருந்திட்டம் தயாரித்தல் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் | 2 மாதங்கள் |
| 3. | பணிகளுக்கான ஒப்பந்ததாரர்கள் நியமனம் செய்தல் | 2 மாதங்கள் |
| 4. | பணிகள் செயலாக்க காலம் | |
| | (1) பணியிட சீரமைப்பு, நீர்ப்பாசன பணிகள், பார்வையாளர்களின் வசதிகள், செடிகள் வளர்த்தல் பெயர்ப் பலகைகள் நிறுவுதல் | 4 மாதங்கள் |
| | (2) ஏனைய பெரும்பணிகள் | 10 மாதங்கள் |
| | (3) பணிமுடித்து சுத்தம் செய்து பூங்காவை உபயோகத்தில் கொண்டுவருதல் | 2 மாதங்கள் |
| | மொத்த காலம் | 2 2 மாதங்கள் |

v) பூங்காவை நிறுவ, பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பு தேவைப்படுவதால் “ செம்மொழி பூங்கா கண்காணிப்பு குழு” என்ற பிரத்தியேக குழுவை கீழ்க்கண்ட அலுவலர்களை உள்ளடக்கி நியமிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், கோவை | தலைவர் |
| 2. | கோவை மாநகராட்சி ஆணையர் | உறுப்பினர் |
| 3. | துணை காவல்துறைத் தலைவர், சிறைத்துறை | உறுப்பினர் |
| 4. | தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோவை நியமிக்கும் தோட்டக்கலை நிபுணர் | உறுப்பினர் |
| 5. | ஊட்டியில் உள்ள தாவரவியல் பூங்காவின் பொறுப்பு அலுவலர் | உறுப்பினர் |
| 6. | சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் பிரதிநிதி | உறுப்பினர் |

மேற்குறித்த கண்காணிப்பு குழுவின் பணிவரன்முறைகள் பின்வருமாறு:

(அ) செம்மொழி பூங்கா பணிகளுக்காக பல்வேறு துறைகள் மற்றும் முகமைகளுடன் ஒருங்கிணைப்பு பணி.

(ஆ) பூங்காவின் கலந்தாய்வு பணி மற்றும் அமலாக்கப்பணி முன்னேற்றத்தை கண்காணித்து மேற்பார்வை செய்தல்.

(vi) செம்மொழி பூங்கா நிறுவ உத்தேசமாக தேவைப்படும் ரூபாய் 20 கோடியை (இருபது கோடி மட்டும்) சென்னை

நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு வழங்குதல்.

(vii) செம்மொழி பூங்காவை பராமரிப்பதற்கென இந்திய அறக்கட்டளைகள் சட்டம் , 1882 ன் கீழ் “ செம்மொழி பூங்கா அறக்கட்டளை”என்ற ஒரு தனி அறக்கட்டளையை நிறுவுதல்.

5. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை பத்திரத்தில் பிரிவு கூறு 2.2 ல் இவ்வறக்கட்டளை சென்னை அடையாறில் அடையாறு பூங்கா அமைப்பதோடு தமிழ் நாட்டின் ஏனைய இடங்களிலும் சுற்றுச்சூழல் பூங்கா அமைத்து ,மேம்படுத்தி, பராமரிக்கும் நோக்கத்தை கொண்டது என கூறப்பட்டுள்ளது. எனவே கோயம்புத்தூரில் செம்மொழி பூங்கா அமைக்கும் பணியை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு ஒப்படைப்பதற்கு சட்டப் பூர்வ தடை ஏதும் இல்லை.

6. மேலே பத்தி 4 –ல் உள்ள உறுப்பினர் – செயலர், சென்னை – நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை அவர்களின் கருத்துருக்களை அரசு நன்கு ஆராய்ந்தபின் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

i) உலகிலேயே இங்கிலாந்திலுள்ள கியு பூங்கா (Kew Park) ஒன்று தான் தாவர உயிரியல் வங்கியாகவும் (GermPlasam Bank) அதன் தொடர்புடைய ஆராய்ச்சி மையமாகவும் உள்ளது. வெப்ப மண்டல நாடான நமது இந்தியாவில் இது போன்ற ஒரு பூங்கா இதுவரையில் அமையப் பெறவில்லை. இப்படிப்பட்ட ஒரு தாவரவியல் பூங்காவை கோவையில் உருவாக்குவது, அதுவும் உலக தமிழ்செம்மொழி மாநாட்டினையொட்டி அமைப்பது மிகவும் பொருத்தமான ஒன்றாகும். எனவே கோயம்புத்தூரில் மத்திய சிறைச்சாலைக்கு சொந்தமான நிலத்தில் “ செம்மொழிப் பூங்கா” என்ற பெயரில் ஒரு சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படும். இப்பூங்காவானது வெறும் பூங்காவாக மட்டுமல்லாமல், உலகத் தரம் வாய்ந்த தாவரவியல் பூங்காவாகவும், தாவர உயிரியல் வங்கியாகவும் (GermPlasam Bank) மற்றும் அதன் தொடர்பான ஆராய்ச்சி மையமாகவும் விளங்க வேண்டும். இந்தத் தாவரவியல் மையமானது பல்வேறு துறைகளுடன் இணைந்து செயல்படக்கூடியதாக அமைக்கப்பட வேண்டும். நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூரில் மலைப்பகுதி தாவரங்களுக்கென சீரிய முறையில் ஒரு தாவர உயிரியல் பூங்கா உருவாக்கப்பட்டு வனத்துறையின் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகின்றது. பிற்காலத்தில் இவ்விரு மையங்களுக்கும் ஒரு வளமான நல்லுறவினை ஏற்படுத்தி மலைப்பகுதி மற்றும் சமவெளி பகுதிகளில் இருக்கக்கூடிய தாவர உயிரியல் பூங்காவை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கோயம்புத்தூர் சிறைச்சாலை முழுப்பகுதியையும் தாவரவியல் பூங்காவிற்கு படிப்படியாக மாற்றப்படும்.

ii) இப்பூங்கா அமைப்பதற்கான பெருந்திட்டத்தை (Master Plan) தயாரிக்கும் பணி சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையிடம் ஒப்படைக்கப்படுகிறது. மாண்புமிகு துணை முதலமைச்சர் இது குறித்து கோயம்புத்தூர் வருகையின் போது அலுவல்சார் கூட்டத்தில் தெரிவித்துள்ள கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு இப்பெருந் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

iii) மேலும், இப்பணிக்குரிய கலந்தாய்வு ஒப்பந்தங்கள் மற்றும் பணி ஒப்பந்தங்களுக்கு ஒப்புதலளிக்கும் அதிகாரம் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு வழங்கப்படுகிறது.

iv) கோவை மத்திய சிறைச்சாலையில் மொத்தமுள்ள 165.4 ஏக்கர் நிலத்திற்கும் சேர்த்து செம்மொழி பூங்கா பெருந்திட்டம் (Master Plan) தயாரிப்பதோடு முதற்கண் காலியாகவுள்ள 49.40 ஏக்கரில் கீழே பட்டியலிடப்பட்ட பரப்பளவினை தவிர்த்து மீதமுள்ள 45 ஏக்கர் நிலத்தை மேம்பாடு செய்து பூங்கா அமைக்க விரிவான திட்டப்பணி மற்றும் செயலாக்க திட்டத்தை தயாரிக்க ஏதுவாக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு நிலமாற்றம் செய்யப்பட வேண்டும். பின்னர் படிப்படியாக கோவை சிறைச்சாலை முழுப் பகுதியையும் தாவரவியல் பூங்காவிற்கு மாற்றப்படும். இது குறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சிறைத்துறை தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

| பிளாக் | நகர அளவை எண். | பரப்பளவு ஹெக்டேர் |
|---|---|---|
| 27 | 1/பாகம் | 0.3932.0 |
| | 2/பாகம் | 0.2565.0 |
| | 14/பாகம் | 0.4718.5 |
| | 15/பாகம் | 0.5568.0 |
| | மொத்தம் | 1.6783.5 |

v) செம்மொழி பூங்கா பணிகளுக்காக பல்வேறு துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தவும் பணி முன்னேற்றத்தை கண்காணிக்கவும் அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தலைமையில் கீழ்கண்ட உறுப்பினர்கள் அடங்கிய ஒரு கண்காணிப்பு குழு அமைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | தலைவர் |
| 2. | மாவட்ட ஆட்சியர், கோவை | உறுப்பினர் |
| 3. | கோவை மாநகராட்சி ஆணையர் | உறுப்பினர்– செயலர் |
| 4. | துணை காவல்துறைத் தலைவர், சிறைத்துறை | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 5. | தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோவை, நியமிக்கும் தோட்டக்கலை நிபுணர் | உறுப்பினர் |
| 6. | ஊட்டியில் உள்ள தாவரவியல் பூங்காவின் பொறுப்பு அலுவலர் | உறுப்பினர் |
| 7. | சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 8. | கோவை வனப்பாதுகாவலர் | உறுப்பினர் |

vi) செம்மொழி பூங்கா அமைக்கப்பட உத்தேசமாக தேவைப்படும் ரூபாய் 20 கோடி (ரூபாய் இருபது கோடி மட்டும்) சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு வழங்க ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி 6(vi) ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினமான ரூ.20 கோடி (ரூபாய் இருபது கோடி மட்டும்) கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

" 4217 நகர்ப்பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு
60– ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சி திட்டங்கள்
051 – கட்டுமானம்
JJ – தமிழ் செம்மொழி பூங்கா
16 – பெரும்பணிகள்
(து.தொ.கு 4217– 60.051 – JJ – 1602) "

8. மேலே பத்தி 6(vi) ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ''புதுப்பணி'' (New Service) குறித்த செலவினமாகும். இச்செலவினத்திற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேலும் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது1) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவிற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி (வ.செ.தி.பொது.1) துறைக்கு இவ்வரசாணையின் நகலுடன் இரு படிகளில் விண்ணப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2009–2010–ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவை அரசின் நிதித்துறைக்கு உடனடியாக அனுப்பி வைக்கும்படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. மேலே பத்தி 7–ல் குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5 அவர்கள் மதிப்பீடு, ஒத்திசைவு மற்றும் கட்டுபாடு அலுவலராவார்.

10.இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.16060/MAWS/10 நாள்:24.3.2010 மூலமாகவும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1839 (ஆயிரத்து எண்ணூற்று

முப்பத்து ஒன்பது) மற்றும் உள்துறையின்அ.சா.எண்.21691A/சிறைIV/2010-1,நாள்:19.3.2010 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**கே.எஸ்.ஸ்ரீபதி,**
**அரசு தலைமைச் செயலாளர்.**

பெறுநர்:
நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை–600 005.
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம்.
துணை காவல்துறைத் தலைவர், சிறைத்துறை, கோயம்புத்தூர்.
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
பொறுப்பு அலுவலர், தாவரவியல் பூங்கா, ஊட்டி.
மாநில கணக்காயர்(A&E), சென்னை – 18/35.
மாநில கணக்காயர்(தணிக்கை) ,சென்னை –18.
உறுப்பினர் – செயலர், சென்னை – நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை, சென்னை – 5.
இயக்குநர்,உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை–108.
சிறைத் துறைத் தலைவர், சென்னை – 8.
காவல் துறை தலைவர், மத்திய சிறைச் சாலை, கோயம்புத்தூர்.
கோவை வனப்பாதுகாவலர், கோவை.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–600 009.
உள்துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை – 9 .
நிதித் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை– 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச்செயலர், சென்னை –9.
சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை – 9
உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் தனி அலுவலரின் தனிச் செயலர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை–9.
நிதி(ந.நி மற்றும் கு.வ/வ.செ.பொது II )த்துறை, சென்னை–9.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்.**